

திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை -DTCP

எரியோடு பேரூராட்சி

(திட்டமில்லாத பகுதி)

திண்டுக்கல் மாவட்டம், வேசந்தூர் வட்டம், எரியோடு பேரூராட்சி மற்றும் கிராமம்,சர்வே எண்கள்: 357/2A -ல் அமையும் உத்தேச குடியிருப்புமனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : ZGIYW46Z நாள்:11.09.2025

அளவு : 1:400

வ

குறிப்புகள்

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு	:	2.455 ஏக்கர்(9940.00ச.மீ)
ஒதுக்கிய மனைப்பிரிவு மனைகள்	:	44
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடுகள்:

1) மனைப்பிரிவு சாலையின் பரப்பு (மூலை முடக்கு உட்பட) : 3211.24ச.மீ

2) பூங்கா ஒதுக்கீடு :

பூங்காவிற்கு தேவையான பரப்பு = 10% X [மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவின் சாலை பரப்பு]

= 10% (9940.00 - 3211.24) = 672.88ச.மீ

10% பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான தொகை அரசாணை 18 ந.நி (ம) கு.வ.து நாள்: 04.02.2019 விதி 47 (6) (ம) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 4367 / 2019-BA2 நாள்:05.02.2020-ல் தெரிவித்துள்ளதன்படி அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் உள்ளபடி உரிய தொகையை உரிய கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

3) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x 0.50%

= (9940.00-3211.24) x0.50 % = 33.64 ச.மீ

ஒதுக்கிய பரப்பு - 36.87 ச.மீ (0.55%)

4) TANGEDCO - க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x 0.50%

= (9940.00-3211.24) x0.50 % = 33.64 ச.மீ

ஒதுக்கிய பரப்பு - 36.33 ச.மீ (0.55%)

மூலை முடக்கு

12மீ வரையிலான சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020பேர நாள் 24.12.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு ஆகியவைவும் உள்ளாட்சிக்கும் அரசாணை எண் 18, ந.நி (ம) கு.வ, துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்: 16, ந.நி (ம) கு.வ.துறை, நாள் : 31.01.2020-ன்படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும் TANGEDCO -என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினை மின்பிகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படுதுயல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைகள் சமர்பிக்கப்பட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்அறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைப்பிரிவுகளை விற்பனை செய்யும் போது இம்மனைப்பிரிவின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வழங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவின் வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.60மீ x 1.20மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்திரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
6. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 16.07.2022-ன்படி உத்தேச மனைப்பிரிவில் தார் சாலை, கழிவுநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. குறைந்த மின்னழுத்த கம்பி பாதையின் போக்கினை மனுதாரர் தனது சொந்த செலவில் அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவு சாலைக்கேற்ப மாற்றி அமைத்து கொள்வதாக உறுதிமொழி பத்திரம் வழங்கியுள்ளார். மின்வாரிய ஒப்புதலுடன் உத்தேச சாலையின் போக்கிற்கேற்ப குறைந்த மின்னழுத்த கம்பி பாதை மாற்றி அமைக்கப்பட்டதை உறுதி செய்து கொண்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கைபடி 'The Tamilnadu Government in G.O. MS No 112, Housing and Urban Development Department, Dated 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, Book sell or offer for sale or Invite persons to purchase in any plot, apartment or building as the case ma be in an Real Estate project or part of it only after registering the real estate project with the TNRERA(Tamilnadu Real Estate regulatory Authority)

சிறப்பு நிபந்தனை:

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

இம்மனைப்பிரிவு தொடர்பாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆணை பெறப்படும்பட்சத்தில் அவ்வாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: அனைத்துஅளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

SWP/DTCP/DINDIGUL / LAYOUT NO: 147/2025

செ.நவநீதகிருஷ்ணன்
உதவி இயக்குநர் நிலை - III

சா.திருமுரளி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்.

Signature Not Verified
Signed by Deputy Director
Location:Dindigul
Date:2025.10.23 21:33:22